# Principal District Munsif Court, Sankarankovil.
# OS.No.37/2020

தேதி : 13.02.2025

வா.சா.1 – முத்துமாரி

**வா.சா.1 மீண்டும் ஆஜர். சத்தியப்பிரமாண வாக்குமூலத்தின்பேரில் 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-**

எனக்கு எழுதப்படிக்கத் தெரியும். நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு நிரூபண வாக்குமூலம் என்பது என்னவென்று தெரியுமா என்றால் எனக்குத் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை எனது வழக்கறிஞர் தயார் செய்து வைத்ததில் நான் கையொப்பம் மட்டும் செய்தேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள கூடுதல் பிரமாண வாக்குமூலத்தை எனது வழக்கறிஞர் தயார் செய்து வைத்ததில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். வழக்குச் சொத்து ஆதியில் யாருக்குப் பாத்தியப்பட்டது என்றால் யாக்கோபு என்பவருக்குப் பாத்தியப்பட்டது. மேற்சொன்ன யாக்கோபு எனக்கு மாமா உறவுமுறை. வழக்குச் சொத்தை எனது தந்தை பேச்சிமுத்து என்பவர் சந்தானம் வாத்தியார் என்பவரிடமிருந்து கிரையம் வாங்கினார். எந்தத்தேதியில் அவ்வாறு கிரையம் வாங்கினார் என்றால் 1999ம் ஆண்டு கிரையம் பெற்றார். கிரையம் வாங்கிய தேதி மாதம் ஞாபகமில்லை. வழக்குச் சொத்து சந்தானம் வாத்தியாருக்கு எப்படிப் பாத்தியப்பட்டது என்றால் யாக்கோபு என்பவரிடமிருந்து கிடைத்த சொத்து. மேற்படி சந்தானம் என்பவர் யாக்கோபின் மகன். வழக்குச் சொத்து ஆதியில் யாக்கோபுக்கு பாத்தியப்பட்டது. யாக்கோபுக்கு 2 குழந்தைகள். அவர்களது பெயர் அருளானந்தம், சந்தானம். வழக்குச் சொத்து யாக்கோபுக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்துள்ளேன். யாக்கோபுக்கு வழக்குச் சொத்து எவ்வாறு பாத்தியப்பட்டது என்று எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. வழக்குச் சொத்து யாக்கோபுக்குப் பாத்தியப்பட்டது என்பதற்கான அவர் பெயரில் உள்ள பட்டாவோ, தீர்வை ரசீதோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் எத்தனை ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்று எனக்குத் ஞாபகமில்லை. இந்த வழக்கில் பிராது வரைபடம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. பிராது வரைபடம் என்றால் என்னவென்று எனக்குத் தெரியாது. வழக்குச் சொத்தில் 1ம் பிரதிவாதி பேரின்பம்தான் 30 ஆண்டுகளாக குடியிருந்து வந்தார் என்றால் சரிதான்.

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

(Sd.) xxxxxxx
Principal District Munsif,
Sankarankovil.